தயாரிப்பு : M.S.F.சப்னா
கே / தெஹி / ஸ்ரீ கதிரேசன் த.ம.வி.
கொணியகலை

**தரம் 10**

01) ஊதா நிறப்பூக்களைக் கொண்ட பட்டாணித் தாவரம், வெள்ளை நிறமான பூக்களைக் கொண்ட பட்டாணித் தாவரத்துடன் இனங்கலக்கப்பட்டபோது F1 சந்ததியில் உருவாகிய தாவரங்கள் யாவும் ஊதா நிறபூக்களைக் கொண்டிருந்தன. இத்தாவரங்கள் தமக்கிடையே இனங் கலக்கப்பட்டபோது ஊதாக்கு வெள்ளை 705: 224 என்ற விகிதத்தில் தோன்றின.

1. மேற்படி செயற்பாட்டில் ஆட்சியான இயல்பு?
2. பின்னடைவான இயல்பு?
3. மேற்படி செயன்முறை மெண்டலின் விதிக்கு அமைகின்றதா என்பதை உறுதிப்படுத்துக?
4. மேற்படி செயற்பாட்டின் தோற்ற அமைப்பு வீதத்தைத் தருக?
5. மேற்படி செயற்பாட்டின் பிறப்புரியமைப்பு வீதத்தைத் தருக?
6. மேற்படி செயற்பாட்டில் சமநுகம் இதரநுகம் ஆகியவற்றைக் குறித்துக் காட்டுக?
7. யாதேனும் இயல்பிற்குறிய பரம்பரையலகுச் சோடிகள் காட்டும் வெளிப்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

**02) பொருத்தமான சொற்பதங்களை தருக.**

1. DNA இல் ஏற்படும் மாற்றம் காரணமாக ஒரு பரம்பரையலகில் ஏற்படும் மாற்றம்?
2. விகாரம் காரணமாக தனி ஒரு நிறமூர்த்தம் காணப்படும் நிலமை?
3. ஒரே நிறமூர்த்தத்தில் காணப்படுவதும் சுயாதீன தனிப்படுத்துகை அடையாத பரம்பரையலகுகள்?
4. மனிதனின் 21 வது தன்நிறமூர்த்தசோடிக்குப் பதிலாக அதன் பிரதிகள் மூன்று தோன்றும் விகாரநிலை?
5. நீளத்திலும் அகலத்திலும் மையப்பாத்து அமைந்துள்ள தானத்திலும் ஒத்த தன்மையைக் காட்டும் நிறமூர்த்த சோடிகள்?
6. விகாரம் காரணமாக ஆண்களின் xxy என்ற நிறமூர்த்தம் எண்ணிக்கை காணப்படும் நிலமை?

7. ஒரு சோடி உறழ் பொருளியல்பைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் இனக்கலப்பு முறை

8. ஆண் பெண் புணரிகளில் கருக்கட்டல் அடையும் போது இலிங்க நிறமூர்த்தங்கள் ஒன்றுசேறும் விதம்?

9. ஒரு அங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூலக்கூறின் பகுதிகளை ஒன்றுசேர்த்து புதிய மூலக்கூற்றை ஆக்கும் செயன்முறை ?

**(DNA மீளச்சேர்க்கை தொழில்நுட்பம், இலிங்கநிர்ணயம்,ஒற்றைக்கலப்புப் பிறப்பாக்கல், அமைப்பொத்த நிறமூர்த்தம், இணைந்த பரம்பரையலகு, விகாரம், டவுண் சகசம், ரேணாசகசம் (Turner’s syndrome),கிளின்பெல்டர் சகசம் (Klinctelter syndrome)**